மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜி. ஆர். மாலா : எடுத்துக்காட்டாக விளங்கும் வண்ணம் வரலாற்றிலும் சரி, ஆன்மீகத்திலும் சரி, தொழில் துறையிலும் சரி, முன் மாதிரியாக விளங்கி ஆட்சி புரியும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் சாதனை மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்கமாக விளங்கும். அந்த மாதிரி ஒரு கண்காட்சியை மாண்புமிகு தொழில துறை அமைச்சர் அவர்கள் தீர விசாரித்து அதை நம்முடைய தமிழகத்தில் நடத்த முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்காட்சியை நடத்தித் தான் அவர்களுக்கு தொழில் பயிற்சியை கொடுக்கவேண்டிய நிலையிலே இல்லை. ஏன் என்றால் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தொழில் பயிற்சிப் பள்ளியிலே படிக்கிறவர்களுக்கு உரிய வாய்ப்புகள், பயிற்சிகள் அங்கே கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 604, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

604—

பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம்.

*8273 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம் (ஐ. டி. ஐ.) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னது உண்மையாகவே எனக்கு வருத்தமாக

இருக்கிறது. காரணம் பேரணாம்பட்டு தொகுதியின் நீண்ட நாள் தேவைகள், கோரிக்கைகள், பத்திரபள்ளி அணைத் திட்டம், சார்பதிவாளர் அலுவலகம், தீயணைப்பு நிலையம், தொழில் கல்விக் கூடங்கள் போன்றவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தொகுதி மக்கள் விரும்புகிறார்கள். அந்தச் சாதனை 'பூ உலகின் புரட்சித் தெய்வம், தமிழக் கடவுள், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தான் முடியும் என்று எல்லோருக்கும் தெரியும். எனவே, கல்லூரிகள், தொழிற் கல்விக் கூடங்கள், இதுவரை பேரணாம்பட்டு தொகுதியில் இல்லாத காரணத்தால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் துவக்கி வரலாற்றை படைத்தார்கள், சாதனை படைத்தார்கள் என்ற வகையில் இந்த ஆண்டே தொழிற் கல்விக் கூடம் துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 21 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும், 13 தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தாலே இப்போது அரசினுடைய நிதி நிலைமையைக் கருதி புதிதாக பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற் பயிற்சிப் பள்ளி துவக்கபட மாட்டாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 605, திரு. தா. செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

605—

பெரம்பலூரில் தொழிற் பயிற்சிக் கல்லூரி

*9143 திரு. தா. செழியன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரம்பலூரில் தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.